ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1793/18 - 2013 ජනවාරි 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.01.17
*1793/18 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல. : நீர்/3/அத்/155.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில், நீர்கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பசியாவத்த வட்டாரத்தில், பசியாவத்த கிராமத்தில் அமைந்துள்ள, கம்பஹா மாவட்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட கம். 3888 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1, 2, 3 எனக் காட்டப்பட்ட 0.0133 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட மூன்று (03) காணித் துண்டுகள் :

**01. துண்டு இல. 01**
காணியின் பெயர் : கடொல்கஹவத்த, தலாஹேன வீதியில் வரி மதிப்பீட்டு இல. 30 இன் ஒரு பகுதி ; விபரம் : வீட்டுத்தோட்டம் ; உரிமை கோருபவர் : எம். ரேமன் பிரணாந்து, பசியாவத்த, தலாஹேன, நீர்கொழும்பு ; விஸ்தீரணம் : 0.0021 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 02**
காணியின் பெயர் : கடொல்கஹவத்த, தலாஹேன வீதியில் வரி மதிப்பீட்டு இல. 35 இன் ஒரு பகுதி ; விபரம் : திறந்த தரிசு நிலம் ; உரிமை கோருபவர் : ஜோஷப் கெஷியஸ் பிரணாந்து, பசியாவத்த, தலாஹேன, நீர்கொழும்பு ; விஸ்தீரணம் : 0.0107 ஹெக்டயார்.

**03. துண்டு இல. 03**
காணியின் பெயர் : கடொல்கஹவத்த, தலாஹேன வீதியில் வரி மதிப்பீட்டு இல. 30ஏ இன் ஒரு பகுதி ; விபரம் : திறந்த தரிசு நிலம் ; உரிமை கோருபவர் : டேவிட் பிரணாந்து, பசியாவத்த, தலாஹேன, நீர்கொழும்பு ; விஸ்தீரணம் : 0.0005 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 21 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நீர்கொழும்பு பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஏ. கே. ஆர். அலவத்த,
பிரதேச செயலாளர்,
நீர்கொழும்பு.

பிரதேச செயலகம்,
நீர்கொழும்பு,
2013.01.16.

02 - 116